NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu* p2
**Date:** 19 April 2015

# இயற்கை வரலாற்று அரும்பொருளகம்

லீ கோங் சியன் இயற்கை அரும்பொருளகம் நேற்று காலையில் கிளெமெண்டியில் அதிகாரபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

250 பேர் பங்கேற்ற அந்த நிகழ்ச்சிக்கு அதிபர் டோனி டான் கெங் யாம் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்தார். அனைத்துல நாடுகளின் அரும்பொருளகங்களிலிருந்து நிபுணர்கள் பலரும் பங்கேற்றனர்.

150 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்த பிரின்ஸ், அப்போலோனியா, டுவிங்கி ஆகிய மூன்று டைனசோர் எலும்புக் கூடுகள் அவர்களை வரவேற்றன. இந்த அரும்பொருளகம் இம் மாதம் 28ஆம் தேதி பொது மக்களுக்குத் திறந்து விடப்படும்.

டோடோ பறவை, கடல்நாகம் போன்ற அழிந்தொழிந்த அரிய உயிரினங்களின் மாதிரிகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தென்கிழக்காசியாவின் உயிரியலைப் பிரதிபலிக்கும் ஈர, உலர் காட்சிப் பொருட்களைக் கொண்டிருக்கும் 2,000 சதுர மீட்டர் பரப்பளவிலான அரும்பொருளகத்தில் வகுப்பறைகளும் பரிசோதனைக் கூடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

தேசியப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் லியோ டான், பீட்டர் இங் ஆகியோரின் முயற்சியில் 2010ஆம் ஆண்டு திரட்டப்பட்ட 46 மில்லியன் வெள்ளி செலவில் ஐந்தாண்டு கடும் உழைப்பில் உருவானது இந்த அரும்பொருளகம்.

இந்த அரும்பொருளகத்தில் பட்டியலிடப்பட்ட விலங்குகள் முதல் படிமங்கள் வரை 560,000 அரும்பொருட்கள் உள்ளன.

முந்தைய ராஃபிள்ஸ் அரும்பொருளகத்தின் காட்சிப் பொருட்களும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன. ஆகப் பழைமையான காட்சிப் பொருள் 1849ஆம் ஆண்டு சேகரிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு 'டைனசோரியா இன்டர்நேஷனல்' என்ற 'வையோமிங்' படிம நிறுவனத்திடமிருந்து இந்த இயற்கை வரலாற்று அரும்பொருளகத்தின் காட்சிப் பொருட்கள் பெறப்பட்டன. 2007, 2010ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவின் 'டென் ஸ்லீப்' நகரில் பல படிமங்களைக் கண்டெடுத்த பெருமை இந்த நிறுவனத்துக்குண்டு. கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் 80 விழுக்காடு முழுமையானவை. டைனசோர் கண்டுபிடிப்புகளில் இது மிக அரிது.



லீ கோங் சியன் இயற்கை அரும்பொருளகத்தை நேற்று கிளெமெண்டியில் அதிபர் டோனி டான் கெங் யாம் அதிகாரபூர்வமாகத் திறந்து வைத்தார். 250 பேர் பங்கேற்ற அந்த நிகழ்ச்சிக்கு அதிபர் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்தார். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.